முருகப்பெருமான் துணை

**மகான் டமாரானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.02.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. ஞான ஆனந்த நன்னெறி
ஞானபண்டிதன் வழிபாடாக
தானதரும வழி முறையோடு
தரணியில் அருளும் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அறிவிப்பேன் துல்லிய ஆசி
வரங்களாக சோபகிருது சால்திங்கள்
வல்லமைபட முன்னான்கோர் திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 13 ம் நாள், 25.02.2024, ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் டமாரானந்தர் யானும்
வழங்குவேன் உலக நலம்பெற
சோரம்போகா ஞானப்படை
செகத்தினில் அரங்கனால் உருவாக்கப்பட
4. உருவாக்கப்பட கலியுகமக்கள்
உலகில் நிலைத்தன்மை பெற
குருமார்க்கம் எனும் அரங்கன்
குருபரன் வழிபாடு நெறிமுறையை
5. நெறிமுறையை ஏற்று வர
நிலவுலகில் எங்கும் சக்தி
அறிவுரையாக பிரணவக்குடிலின்
ஆற்றலாக அறமாகப் பரவி
6. பரவி எங்கும் பண்பான
பக்குவமிக்க படைகளாக
பரவி அரங்கன் ஆசி பெற்ற
பரோபகாரமிக்க மனிதர்களாக
7. ஆகவே தேற்றம் கூடி
அறமும் முருகப்பெருமான் வழிபாடும்
மிகைபட உலகினில் மாற்றம்
முழுமைபட ஞானவழி காணும்

8. காணவே குருவருளாகவே
கலியினில் வாழும் மக்கள்
ஞானவான்களாக அடையாளம்
ஞானபண்டிதன் காட்சி கிட்ட
9. கிட்டவே மாற்றங்கள் கூடி
குவலயத்தில் ஞானத் தலைமை
தட்டாமல் படைக்கும் சக்திகளாக
தனிப்பெரும் ஞானப்படைகளாக
10. ஆகவே உலகெலாம் நிரம்பி
அரங்கன் அவதார நோக்கம்
செகமெங்கும் நிறைவேறும்படி
செப்பிடுவேன் மாற்றம் காணும்
11. மாற்றம் தரும் மாதவசி
மகான் அரங்கன் வருகை
ஆற்றல்பட உலகறிய நன்மை
அகிலமாற்றமாக நிகழும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—